# இயக்குநர் மதிசுதாவின் "வெந்து தணிந்தது காடு": போர்க்கால வாழ்வியலின் சித்திரிப்புக் குறித்த பார்வை

**தேவஜனனி, ந., ரகுராம், சி.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
njanajanai@gmail.com

*வலிகளின் வாழ்விடமாகிப்போன ஈழத்தின் கதைகளை திரைப்படமாக்குவதென்பது மிகச் சவாலானதாகும். மக்கள் கதைகளை அவற்றின் யதார்த்தத்திற்குப் பங்கமேற்படாமலும், வலிகளிலிருந்து மீண்டவர்களையும், மீண்டு கொண்டிருப்பவர்களையும் மீண்டும் மீண்டும் அந்தந்த நினைவுச் சித்திரவதைகளுக்குள் சிறைப்பட வைக்காமலும், மண்ணுக்காய் மறைந்துபோனவர்களின் உறக்கத்தைக் கலைக்காமலும் மிகக் கவனமாக திரைக்காவியங் களாக உருவாக்குவது மிகவும் சிக்கலானதொரு விடயமாகும். இவ்வாறானதொரு முயற்சி யென்பது ஈழத்தின் வலிநிறைந்த வாழ்வியலைத் தலைமுறை கடந்து எடுத்தியம்புவதற்கும், கடந்த காலத்தின் வாழ்வியற் கூறுகளை மீட்டிப் பார்ப்பதற்கும், எதிர்கால சந்ததியினர் போர்க்கால வாழ்வியலைப் புரிந்து கொள்வதற்குமான ஆவணமாகவும் அமைகிறது. அந்த வகையில் ஈழத்தின் போர்க்கால வாழ்வியல் தொடர்பாக ஆராயும் முகமாக இயக்குநர் மதிசுதாவின் "வெந்து தணிந்தது காடு" திரைப்படம் ஆய்வின் பிரதான மாதிரியாக எடுத்துகொள்ளப்பட்டது. இந்தத் திரைப்படத்தின் திரைக்கதை, வசனங்கள், காட்சி அமைப்புக்கள், கதைக்களம், கதாபாத்திரங்கள், போர்க்கால வாழ்வியல் ஆகியவற்றோடு, திரைப்படம் தொடர்பாக வெளிவந்த திறனாய்வுகளையும் உள்ளீர்த்து உள்ளடக்க ஆய்வு நிகழ்த்தப்பட்டது. இந்த உள்ளடக்க ஆய்வின்வழி போர்க்கால வாழ்வியலை "வெந்து தணிந்தது காடு" எவ்வாறு சித்திரித்துள்ளது என்பது ஆராயப்பட்டது. போர்க்காலத்தின் போது மக்களின் அனுபவங்கள், வாழ்க்கையின் பிரதிபலிப்பு, அச்சூழலில் வாழ்ந்த நபர்களின் உளவியல் மற்றும் உணர்ச்சி வெளிப்பாடுகள் ஆகியவற்றைத் திரைப்படம் சித்திரித்து முன்வைத்தவிதம், அவற்றின் துல்லியத்தன்மை அகியனவும் ஆராயப்பட்டன. இந்த திரைப்படத்தில் வரக்கூடிய பெரும்பாலான காட்சிகள் யதார்த்தத்தை வெளிக்காட்டுவதாக அமைந்திருந்தமை ஆய்வின்வழி உறுதிப்படுத்தப்பட்டது. கதாபாத்திரங்கள், வசனங்கள், ஆகியவற்றோடு தொழில்நுட்பரீதியாக ஒளிப்பதிவும், ஒலிச்சேர்க்கையும் இதற்குப் பெருந்துணைபுரிந்துள்ளன. ஆனால், கதைக்களம் மற்றும் காட்சிகள் போர்க்கால வாழ்வியலை அச்சொட்டாகச் சித்திரிக்க முயன்றாலும், போரியல் வாழ்வு பற்றிய சில வலிந்த சேர்க்கைகளும் இணைந்ததாக இந்த திரைப்படம் அமைவதும் அவதானிக்கப்பட்டது. குறிப்பாக, இறுதிக்கட்டக் காட்சிகள் பதுங்குழி வாழ்வைக் காட்டும்போது படைப்பாளியின் கருத்தியலை முன்கொண்டுவர சற்று மிகைப்படுத்தப் பட்ட கால இணைப்புக்கள் ஒருசேர காட்சித்தொடராக வரிசைப்படுத்தப்பட்டிருந்ததும் உணரப்பட்டது.*

**திறவுச்சொற்கள்** : மதிசுதா, ஈழத் திரைப்படங்கள், போர்க்கால வாழ்வியல், சித்திரிப்பு